பலர் தேடப்பட்டு வருகிறார்கள்; கள்ளச்சாராயம், விஷச்சாராயம் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன; இறந்தோர் குடும்பத்துக்கு பத்து இலட்சம் ரூபாய் தரப்பட்டு, பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது; பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கை பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது; மாவட்ட ஆட்சியர் மாற்றப்பட்டுள்ளார்; மாவட்ட எஸ்.பி. உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்; மதுவிலக்கை கவனித்து வந்த ஏ.டி.ஜி.பி. கட்டாயக் காத்திருப்பில் வைக்கப்பட்டுள்ளார். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை 24 மணி நேரத்தில் இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதற்கிடையில் நேற்றையதினம்கூட ஆர்ப்பாட்டங்களெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆர்ப்பாட்டம் செய்வது என்பது நியாயம்தான். ஜனநாயகத்தில் எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. ஜனநாயகத்திலே இருக்கக்கூடிய உரிமை அது. யார் வேண்டுமானாலும் ஆர்ப்பாட்டம் செய்யலாம். அது நியாயமான முறையில் ஆர்ப்பாட்டமாக இருந்தால், அரசு அதற்கு அனுமதி அளிக்கும். ஆனால், அந்த ஆர்ப்பாட்டத்திலேகூட திரும்பத் திரும்ப சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள்.

இதே எதிர்க்கட்சித் தலைவர் அப்போது முதலமைச்சராக இருந்தபோது, அவர்மீது சி.பி.ஐ. விசாரணை கொண்டுவரப்பட்டதை அவர் மறந்திருக்க மாட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைப்புச் செயலாளர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, அதிலே முறைகேடு நடந்திருக்கிறது; அதற்கு சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டுமென்று நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அதை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டது. சி.பி.ஐ. மீது நம்பிக்கை இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு, அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், சி.பி.ஐ. மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினால்தான், அதற்குத் தடை உத்தரவு வாங்கிய வீராதி வீரர்தான் *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு இந்த விஷயத்தில் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று முழங்கிக் கொண்டிருக்கிறார். எனவே, இதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்

பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல, வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்தச் சபையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்து, அதன் மூலமாக ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக வெற்றியை மறைப்பதற்காக ஒரு நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தெரியும், ஏற்கெனவே அவைத் தலைவராக இருந்தவர் அங்கு இருக்கிறார். கடந்த காலத்தில் எழுந்து நின்று பேச முற்பட்டால், உடனடியாக அமருங்கள், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் என்று சொல்லி, எங்களைப் பார்க்கவே மாட்டார் அந்தச் சபாநாயகர். நீங்களாவது அவர்களைப் பார்த்து சிரித்து பேசி, அவர்கள் சொன்னதைக் கேட்டு, நடுநாயகமாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் நீங்கள் சொல்வதையும் கேட்காமல் இருந்ததால், அன்றைக்கு அவர்களை வெளியேற்றிய பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு அவர்களை மீண்டும் அழைக்க வேண்டும், அவையில் அவர்கள் உரையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, அவர்களைத் திருப்பி அழைத்தபோது, மீண்டும் அவர்கள் அதே தவறினைச் செய்கிறார்கள். எனவே, அவர்கள் கடந்த காலத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பது எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். எள் முனையளவுகூட அவர்களிடம் ஜனநாயகம் இருக்காது.